**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR**

| | | |
|---|---|---|
| CC | : | 33/ 2025 |
| Deposition of Witness for | : | PW. 1 (LW-1 ) |
| Name | : | நவலட்சுமி |
| Father’s Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |
| Accused | : | எதிரி ஆஜர். |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1973 of that 06th day of February 2026.**

**முதல் விசாரணை:**

நான் சாலைப்பாளையத்தில் குடியிருக்கின்றேன். டெக்ஸ்டைல்சில் வேலை செய்து வருகின்றேன். எனது கணவர் சுப்பிரமணி என்பவர் சின்னாண்டான்கோவில் பகுதியில் அட்லஸ் டெக்ஸ் என்ற நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். 04.06.2024–ம் தேதி எனது கணவர் குழந்தைகளுக்கு யூனிபார்ம் துணி எடுப்பதற்காக அவருக்கு சொந்தமான இரு சக்கர வாகனத்தில் எனது மூத்த மகன் சந்தோஷ்ராஜ் என்பவரை அழைத்துக் கொண்டு வந்தார். அப்போது கரூர்–கோவை சாலையில் எனது கணவர் சாலை ஓரமாக சென்று கொண்டிருந்தபோது எனது கணவருக்கு பின்னால் வந்த அரசு பேருந்து வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டு எனது கணவருக்கும், எனது மகனுக்கும் காயம் ஏற்பட்டு இருவரையும் அங்கிருந்தவர்கள் எனது மகனை நாச்சிமுத்து மருத்துவமனையிலும், எனது கணவரை கரூர் அரசு மருத்துவமனைக்கும் ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்துள்ளனர். இது சம்பந்தமாக எனக்கு தகவல் கிடைத்தது. கணேசன் என்பவர் எனக்கு தகவல் தெரிவித்தார். நான் உடனடியாக அரசு மருத்துவமனை சென்று பார்த்தபோது எனது கணவர்

இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தார்கள். எனது மகனுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இது சம்பந்தமாக நான் கரூர் நகர் காவல்நிலையத்தில் புகார்கொடுத்தேன். **அந்த புகார் அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாகத் தெரியாது. யாருடைய அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்றும் எனக்குத் தெரியாது. நான் எழுத்து மூலமாக புகார் கொடுத்தேன்.

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்,<br>கரூர். |